இந்து தமிழ் திசை - 10/12/2022

# புதிய கல்விக் கொள்கையால் நாடு முன்னேறும்

## ● தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கருத்து

**● கோவை**

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை தனிப்பட்ட ஒருகட்சிசார்ந்தது அல்ல. நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்தார்.

கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் கல்வி மற்றும் நிர்வாக மேம்பாட்டு மைய திறப்பு விழா நேற்று நடந்தது. வேந்தர் தியாகராஜன் தலைமை வகித்தார். துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர் வரவேற்றார். இந்திய பல்கலைக்கழகங்கள் சங்கத்தின் செயலாளர் பங்கஜ் மிட்டல் முன்னிலை வகித்தார்.

கல்வி மற்றும் நிர்வாக மேம்பாட்டு மையத்தை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சென்னையிலிருந்து காணொலி வாயிலாக தொடங்கி வைத்து பேசியதாவது:

நம் நாட்டை ஆட்சி செய்த ஆங்கிலேயர்கள் சட்டத்தை வகுத்து ஆட்சி செய்தனர். அவர்கள் நம் நாட்டை விட்டுச் சென்றாலும் அவர்கள் வகுத்து வைத்த சில சட்ட நடைமுறைகள் இன்றும் நம்மை விட்டுச் செல்லவில்லை. நம் எண்ணத்தில் ஆங்கிலேயர்கள் தாக்கத்தை ஏற்படுத்திச் சென்றதே இதற்கு காரணம். மகாத்மா காந்தியடிகளே இதை கூறியுள்ளார். கடினமாக உழைத்தால் இதன் தாக்கத்தில் இருந்து விடுபடலாம் எனவும் தெரிவித்துள்ளார். உயர் கல்வித் துறையிலும் மேற்கத்திய நடைமுறைகள் பின்பற்றப்பட்டுவரும் நிலையில் அவற்றுக்கு மாற்றாக நம் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கை. தொடக்கத்தில் கடுமையாக எதிர்த்து விமர்சித்தவர்கள் கூட இன்று அதை ஆதரிக்கத் தொடங்கியுள்ளனர்.

மீதமுள்ளவர்களும் விரைவில் மனம் மாறி புதிய கல்விக் கொள்கைக்கு ஆதரவு தெரிவிப்பார்கள். இது தனிப்பட்ட அரசியல் கட்சி சார்பில் உருவாக்கப்பட்டது அல்ல. நம் நாட்டு முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்றைய உலகில் மாறிவரும் நவீன தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப இளைஞர்கள் தங்களை தயார் படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். இவை அனைத்துக்கும் புதிய கல்விக்கொள்கை உதவும். ஜி20 உச்சி மாநாட்டுக்கு இந்தியா தலைமை ஏற்றுள்ளது பெருமைக்குரியது.

இவ்வாறு அவர் பேசினார். அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் கல்வி நிறுவனத்தின் பதிவாளர் கௌசல்யா நன்றி கூறினார்.



↑ கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் கல்வி மற்றும் நிர்வாக மேம்பாட்டு மையத்தை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சென்னையில் இருந்து காணொலி வாயிலாக திறந்து வைத்து பேசினார்.

படம்: ஜெ.மனோகரன்